# டெலோ தலைவர் ஸ்ரீசபாரத்தினத்தின் சடலம் கோப்பாயில் தகனம்

(யாழ். அலுவலக நிருபர்)

கோண்டாவிலில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட தமிழீழ விடுதலை இயக்கத் தலைவர் ஸ்ரீ சபாரத்தினத்தின் சடலம் கோப்பாய் சுடுமயானத்தில் செவ்வாய் இரவே தகனம் செய்யப்பட்டது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் மற்றொரு முக்கியஸ்தரான மோகன் என்பவர் சூட்டுக் காயங்களுடன் உயிர் தப்பிவிட்டதாக சொல்லப்படுகிறது.

திரு. வி. பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் களினாலேயே இவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர்களை உயிருடன் பிடிக்கவே முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும். ஆனால், தப்பியோடியதால் அவர்கள் சுடப்பட்டனராம்.

தமிழீழ விடுதலை இயக்கத்துக்கு (டெலோ) எதிராக விடுதலைப் புலிகள் இயக்கம் கடந்த பல நாட்களாக மேற்கொண்டுவரும் வேட்டையைத் தொடர்ந்தே டெலோ தலைவர்கள் மீதான இத்தாக்குதல் செவ்வாய் பிற்பகல் 3 மணியளவில் இடம் பெற்றது.

## இருந்த இடம் கண்டு பிடிப்பு

கடந்த பல நாட்களாக சபாரத்தினத்தை தேடி வந்த விடுதலைப் புலிகள் அவர் கோண்டாவிலில் இருந்த இடத்தை கண்டு பிடித்து செவ்வாய் காலை முற்றுகையிட்டனர். தங்களிடம் சரணடைந்து விடும்படி அவர்கள் சபாரத்தினத்துக்கு உத்தரவிட்டனர். ஆனால், அவர் சரணடையவில்லை.

பிற்பகல் 3 மணியளவில் சபாரத்தினம் தப்பியோட முயன்றதாகக் கூறப்படுகிறது. அப்பொழுது புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவே அவர் சூடுபட்டு அதே இடத்தில் இறந்தார். அவருடன் சேர்ந்து தப்பியோட முயன்ற அவரது மெய்க்காவலரான மோட்டை மாமா என அழைக்கப்படும் ரஞ்சனும் சூட்டுக் காயத்துக்கு இலக்கானார்.

## மோகனுக்கு காலில் காயம்

டெலோ இயக்கத்தின் மற்றொரு தலைவரான மோகனும் இச் சம்பவத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். ஆனால், காலில் காயம்பட்ட அவர் புலிகளினால் தனியார் மருத்துவமனை யொன்றுக்கு விரைவாகக் கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சையளிக்கப்பட்டதால் உயிர் காப்பாற்றப்பட்டது. அவரது உயிருக்கு ஆபத்தில்லையென பின்னர் கூறப்பட்டது.



டெலோ இயக்கத்தின் பிரசார பிரிவு பொறுப்பாளரான மோகன் நிம்பு பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் பெரோய் தேவனின் தம்பி ஆவார்.

## தடுப்புக் காவலில் இருந்தவர்

ஸ்ரீ சபாரத்தினம் முன்னைய அரசின் காலத்தில் நாலு ஆண்டுகள் தடுப்புக் காவலில் இருந்தவர். கல்வியங்காட்டிலுள்ள டெலோ தலைமையகத்தை விடுதலைப் புலிகள் சுற்றி வளைத்த போது ஸ்ரீ சபாரத்தினம் அங்கிருந்து தப்பிச் சென்றதாகக் கூறப்பட்டது.

## 300 பேர் வரை சரண்

விடுதலைப் புலிகளின் வேட்டை ஆரம்பமான பின்னர் இதுவரை சுமார் 300 டெலோ உறுப்பினர்கள் சரணடைந்திருப்பதாக மதிப்பிடப்படுகிறது.

டெலோ தலைவர்களை பிடிக்கும் வரையே சரணடைந்திருப்போரை தாங்கள் காவலில் வைத்திருப்பதாக விடுதலைப் புலிகள் ஏற்கனவே கூறியிருந்தனர்.

## சரணடைந்த 'டெலோ' உறுப்பினர் விடுதலையாவர்

(யாழ். அலுவலக நிருபர்)

டெலோ இயக்கத் தலைவர் ஸ்ரீ சபாரத்தினம் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதால் இதுவரை சரணடைந்துள்ள அந்த இயக்கத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோரை விரைவில் விடுவிப்பதாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் யாழ். மாவட்டத் தலைவர் திரு. கிட்டு அறிவித்துள்ளார். பொது மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படாத வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்ற உறுதி மொழி பெற்றே இவர்கள் விடுதலையாவர்.

ஸ்ரீ சபாரத்தினம் சுடப்பட்ட போது அவரது நெருங்கிய சகாக்கள் நால்வருக்கு காலில் சூட்டுக்காயங்கள் ஏற்பட்டன. இவர்கள் அனைவரும் பிடிபட்டுள்ளனர்.

8/5/86 வீரகேசரி.

# வடக்கில் கொள்ளை சம்பவங்கள் குறைந்தன

## மக்கள் நிம்மதிப் பெருமூச்சு

(யாழ். அலுவலக நிருபர்)

கடந்த சில தினங்களாக வடக்கில் வாகனக் கடத்தல், கொள்ளைச் சம்பவங்கள் நடைபெறவில்லை; இதனால் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர்.

வழமைக்கு மாறாக மோட்டார் சைக்கிள்கள், வாகனங்கள் வீதிகளில் காணப்படுகின்றன.

இதேவேளை, விண்சர் தியேட்டருக்கு அருகாமையில் மேலும் வாகனங்களை தரிக்க முடியாத விதத்தில் இடவசதி இல்லாமையால் யாழ். ஆரியகுளத்தடியிலும் மீட்கப்பட்ட வாகனங்கள் பொது மக்களின் பார்வைக்காக தரித்துவிடப்பட்டுள்ளன.

மோட்டார் சைக்கிள்கள், ஜீப் வண்டிகள், மினி பஸ்கள், மினி பஸ்கள், உழவு இயந்திரங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள் பாவித்த வர்த்தக வாகனங்கள் என்பன இவ்விடம் வைக்கப்பட்டுள்ளன. அதேசமயம் டெலோ இயக்கத்திடமிருந்து கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள் பெட்டிகள், டிரக்குகள், கார்கள், போன்றவை எடுக்கப்பட்டுள்ளன.

போகிற பொருட்களும் உரியவர்களிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

# மீட்கப்பட்ட வாகனங்கள் உரியவர்களிடம் ஒப்படைப்பு!

தமிழ் விடுதலைப் புலிகள்
(பிரித்தானியக் கிளை)
42, ALBANY STREET
LONDON NW1 4EA
01-387-4739
செய்திச் சேவை 01-622-1864

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடுதலைப் பாதையிலிருந்து விலகும் இயக்கங்களைத் தடை செய்வோம்

## புலிகள் இயக்க யாழ் மாவட்ட தலைவர் விளக்கம்

4.5.1986

(யாழ். அலுவலக நிருபர்)

விடுதலைப் பாதையிலிருந்து விலகிச் செல்லும் இயக்கங்களை தடைசெய்வதென்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொள்கைக்கு அமைய இப்பொழுது "டெலோ" இயக்கத்தையும் தடைசெய்கிறோம் என்று விடுதலைப் புலிகள் இயக்கத்தின் யாழ். மாவட்ட தலைவரான கிட்டு அறிவித்துள்ளார்-

டெலோ முகாம் ஒன்றை அழிக்க விடுதலைப் புலிகள் இயக்க குழுவொன்று சென்ற போது பொதுமக்கள் பலர் அவர்களை எதிர்கொண்டு, தற்பொழுது வடக்கில் இடம் பெறும் இயக்க மோதல் குறித்து கேள்வி எழுப்பிய பொழுதே அவர் இந்த விளக்கத்தை அளித்துள்ளார்-

வெள்ளிக்கிழமை மாலை யாழ். பிரதான வீதி தண்ணீர் தாங்கியடியிலுள்ள டெலோ முகாமை கைப்பற்றி அழித்த இக் குழுவினர், அங்கிருந்த பொருட்களைக் கைப்பற்றிய பொழுதே பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

விடுதலை இயக்கமென்ற பெயரில் விடுதலையுடன் தொடர்புடைய வேலையைச் செய்யாமல் தமிழ் மக்களின் தேட்டத்தைக் கொள்ளையடித்து வந்த தமிழீழ விடுதலை இராணுவத்தையும் விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்துள்ளதென்றும் கிட்டு பொதுமக்களிடம் கூறியுள்ளார்.

"எமக்கு எந்த இயக்கத்தின் மீதோ அல்லது தனிப்பட்ட நபர் மீதோ குரோதமில்லை- தமிழ் மக்களின் மேம்பாட்டுக்காக பாடுபட இயக்கம் ஆரம்பித்த நாம், தமிழ் மக்களின் அழிவுக்கோ வெறுப்புக்கோ காரணமாக இருக்க, எந்த ஒரு சக்தியையும் இந்த மண்ணில் அனுமதிக்க முடியாது" எனவும் கிட்டு கூறியுள்ளார்.

மக்களின் வேண்டுகோளையேற்றும் அவர்களின் கஷ்டத்தை உணர்ந்துமே நாம் இந்த துணிகர நடவடிக்கையில் இறங்கினோம். அதற்கு மக்கள் ஆதரவளித்து வருவதை நாம் நேரடியாக காணுகிறோம்" எனவும் கிட்டு கூறியுள்ளார்.

இதற்கிடையில் நேற்றும் விடுதலைப் புலிகள் இயக்கம் தனது வேட்டையைத் தொடர்ந்தது.

---

4-5-1988

# ஆயுத மோதல் ஏன் ஆரம்பித்தது?- பாலசிங்கம் விளக்கம்

சென்னை, ஏப். 30,

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இரண்டு முக்கிய உறுப்பினர்கள் கடத்தப்பட்டதுடன் இவ்வியக்கத்தின் கொமாண்டர்களில் ஒருவரான கப்டன் லிங்கம் என்பவர் டெலோ இயக்கத்தால் கொல்லப்பட்டதை யடுத்தே ஆயுத மோதல் ஏற்பட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த திரு. பாலசிங்கம் இன்று தெரிவித்தாரென சென்னை 'இந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகைச் செய்தியில் திரு.பாலசிங்கம் மேலும் கூறியுள்ளதாவது:

தமிழீழ விடுதலைப் புலிகளின் கெரில்லா அமைப்புக்கள் கடத்தப்பட்ட தமது உறுப்பினர்களை காப்பாற்றுவதற்கு தடுப்பு நடவடிக்கைகளாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள டெலோ தளங்களை தாக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இந்த நடவடிக்கைகளின்போது பல டெலோ கெரில்லாக்கள் கொல்லப்பட்டதோடு ஆயுதங்களும் வெடி மருந்துகளும் கைப்பற்றப்பட்டன. கடந்த 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இலங்கை கடற்படையினருடன் கடலில் நடந்த மோதலில் இறந்த விடுதலைப் புலிகளின் கமாண்டர்களில் ஒருவரின் ஞாபகார்த்தமாக ஹர்த்தாலை அனுஷ்டித்த யாழ்ப்பாண பொதுமக்களை ஆயுதந்தாங்கிய 'டெலோ' இயக்க உறுப்பினர்கள் தாக்கியதைத் தொடர்ந்து பிரச்சினை ஆரம்பமாகியது.

'விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஏற்பட்ட அமோக ஆதரவைக்கண்டு எரிச்சலடைந்த டெலோ இயக்க உறுப்பினர்கள் இறந்த தமது இயக்க வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தவில்லை என குற்றஞ்சாட்டி சிவிலியன்களை தாக்கினர். அப்போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இரண்டு உயர் உறுப்பினர்கள் தலையிட்டு பொது மக்களுக்கு பாதுகாப்பளிக்க முற்பட்ட போது அவர்கள் தாக்கப்பட்டதுடன் கடத்தப்பட்டனர்.

இந்தக் கடத்தலால் தமது சிரேஷ்ட உறுப்பினர்களை விடுவிக்க புலிகள் இயக்கத்தினர் ஆயுத நடவடிக்கையில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டதுடன் மோதலில் பல டெலோ கொல்லப்பட்டதுடன் பெருந்தொகையானோர் தமது ஆயுதங்களுடன் சரணடைந்தனர். இத்துடன் புலி இயக்க கெரில்லா ஒருவரும் கொல்லப்பட்டார்.'

புலிகள் இயக்கத்தின் தலைவரும், இராணுவ கமாண்டருமான திரு.வி. பிரபாகரன் டெலோ தலைவர் சபாரத்தினத்தை கொலை செய்ய கட்டளையிட்டார் என்று இலங்கையில் வெளிவந்த செய்திகளை திரு. பாலசிங்கம் மறுத்ததுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பெயரை கெடுக்கும் நோக்காக உண்மையைத் திரித்து கூறப்பட்ட செய்திகளே இவை எனக் குறிப்பிட்டார்.

---

வவுனியா, உட்புற கிராமங்களில்

# 'டெலோ' இயக்கத்தவர்களை சரணடைய கோரிக்கை

## ஒலிபெருக்கி மூலம் புலிகள் வேண்டுகோள்

(கேசரி நிருபர்)

டெலோ இயக்கத்தவர்களை சரணடையும்படி கோரும் அறிவிப்புகளை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வவுனியாவிலும் விடுத்து வருகிறது.

வாகனம் ஒன்றில் பொருத்தப்பட்ட ஒலிபெருக்கி மூலம் விடுக்கப்படும் இவ்வறிவித்தலில், பல கொள்ளைகளுக்கும் வாகனக் கடத்தல்களுக்கும் டெலோ இயக்கமே காரணமாயிருந்தது என்றும் அந்த இயக்கத்தைச் சேர்ந்த எவருக்கேனும் யாரும் அடைக்கலம் கொடுத்திருந்தால் உடனடியாக அவர்களை தம்மிடம் ஒப்படைத்துவிட வேண்டும் எனவும் அந்த ஒலிபெருக்கி அறிவிப்பில் கோரப்பட்டது.

வவுனியா, மன்னார் வீதியில் உள்ள உட்புறக் கிராமங்களிலேயே இந்த அறிவிப்புகள் கடந்த இரண்டு நாட்களாக விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

வவுனியாவில் ப.நோ.கூ. சங்கங்களில் இடம்பெற்ற கொள்ளைகள் மற்றும் அகதிகளுக்கு அனுப்பப்பட்ட உணவுப் பொருட்களை கொள்ளையடித்தமை போன்ற செயல்களுக்கும் டெலோ இயக்கமே காரணம் எனவும் அந்த அறிவிப்பில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

(யாழ். அலுவலக நிருபர்)

யாழ். குடா நாட்டில் நேற்று இனம் புரியாத அமைதி நிலவியது. குண்டு வெடிப்பு சத்தங்களோ, வேட்டுச் சத்தங்களோ கேட்காத நிலையில் யாழ்நகரிலும் அதன் சுற்றுப் பிரதேசங்களிலும் அமைதி நிலவியது.

## வீதிகளில் புலி இயக்கத்தினர் காவல்; நடமாட்டமும் அதிகரிப்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழ விடுதலைப் புலிகள்
**Liberation Tigers of Tamil Eelam**
*(UK Branch)* (பிரித்தானியக் கிளை)

Madras 000002
13 May 1986

TIGERS REFUTE CHARGES

Liberation Tigers of Tamil Eelam (LTTE) wish to deny charges of atrocities against TELO members as reported by a UNI correspondent quoting sources in Jaffna. The report is distorted, exaggerated and maliciously fabricated to tarnish the image of our movement.

We wish to deny categoricaly that LTTE fighters shot dead young TELO members who surrendered nor was any one burnt alive. The LTTE set free all those who have surrendered. Casualties occured in places where TELO fighters put up stiff resistance. The report that claims that LTTE guerrillas behaved in "insane frenzy" and committed "inhuman atrocities" is absolutely untrue. The correspondent has not witnessed any thing but obtained prejudiced statements from the so called eye witnesses who were TELO sympathizers.

The hartal organised by the Eelam People|s Revolutionary Liberation Front (EPRLF) is not total as reported by the correspondent but rather partial. As local news papers reported, only a few shops were closed and schools and bus services ran normally. Reports that the majority of the casualties on the TELO side were from the Eeastern Province is absolutely baseless concocted to justify the lack of mass protest in Jaffna peninsula.

The truth is that the people of Tamil Eelam supported our punitive action against TELO for the simple reason that TELO functioned as an anti social force committing innumerable crimes and has been harassing and intimidating the public. It is the well known fact that the TELO members were the most indiciplined and unruly crowd engaged in roberies, lootings, kidnaping and killing civilians including the two ex. MPs of the Tamil Unitd

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

contd....

www.tamilarangam.net



Liberation Front. TELO was responsible for looting hindu temples and hijacking of hundreds of private owned vehicles. By such anti social criminal behaviour , the TELO earned mass rsentment in the Northern and Eastern Provinces. It is precisely because of the fact that TELO functioned as a reactionary anti popular force, the Tamil people supported LTTE|s military action against the TELO. Local news papers reported that public were jubilant and served cool drinks to Tiger fighters engaged in combat operations against TELO guerrillas.

The UNI|s correspondent|s allegation that LTTE|s military operation against the TELO was a calculated pre-planed action to undermine India|s peace mission is a malicious distortion of truth. The LTTE has always supported India|s peace initiative and this unfortunate incident occured as a consequence of murder and kidnaping of our senior members by the TELO.

The LTTE wishes to deny categoricaly that it is in any way responsible for the anti Indian posters that misteriously sprang up in Jaffna. This is certainly the dubious work of some mischievous elements whose objective is to drive a wedge between the LTTE and the Government of India.

S.Subramanian,
Political Committee,
Liberation Tigers of Tamil Eelam

(This statement is re-issued in London)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

(UK Branch) (பிரித்தானியக் கிளை)

செ. இல 000004

14.5.86

<u>தமிழர் ஐக்கிய விடுதலைக்கூட்டணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரின் கொலைகளுக்கு தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) பொறுப்பு</u>

அண்மையில் தமிழீழ விடுதலைப்புலிகள் TELO இயக்கத்திற்கெதிராக மேற்கொண்ட நடவடிக்கையின் போது TELO உறுப்பினரான கோப்பாய் தெற்கை சேர்ந்த பழனிவேல் தங்கராஜா (இயக்கப்பெயர் பரா) என்பவர் கைப்பற்றப்பட்டார். விடுதலைப்புலிகளால் அவர் தீர விசாரிக்கப்பட்டார். 2.9.85 அன்று தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான திரு. தருமலிங்கம், திரு. ஆலாலசுந்தரம் ஆகியோரின் கொலைகளில் தான் பங்குபற்றியதை அவர் ஒப்புக்கொண்டார். தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கொல்லும்படி TELO தளபதிகளில் ஒருவரான 'பொபி' என்பவர் தங்களுக்கு கட்டளை பிறப்பித்ததாகவும், தாங்கள் காரணம் கேட்ட போது இது தலைமைப்பீடத்தின் முடிவு, இதுஒரு அரசியல் தந்திரம், விளக்கம் தேவையில்லை என்று பொபி கூறியதாயும் அவர் கூறினார். அவரது வாக்குமூலத்தில் மேலும் கூறியதாவது:-

இக்கொலைகளுக்கு வசந்தன் தலைமை தாங்கினார். நான், சிட்டிபாபு, ரஞ்சித் ஆகியோர் பங்கேற்றோம். இச் சம்பவம் நடந்த அன்று வல்வெட்டித்துறையில் இருந்த எமது முகாமில் பழுப்பு நிற மொறிஸ் OXFORD கார் எம்மிடம் தரப்பட்டது. இக் கார் சம்பவ தினத்திற்கு முதல் நாள் கிருபா என்பவரால் எங்கிருந்தோ கடத்திக்கொண்டு வரப்பட்டது. அக்காரில் நாம் நால்வர் மாலை 7.30 மணியளவில் ஆலாலசுந்தரம் வீட்டிற்கு சென்றோம். பாஸ்போட் விடயமாக அவருடன் பேச வேண்டுமென்று கூறினோம். வெளியே வந்த அவரை பலவந்தமாக காரில் ஏற்றிக்கொண்டு தருமலிங்கம் வீட்டுக்குச் சென்றோம். ஆலாலசுந்தரம் உங்களுடன் கதைப்பதற்கு வந்துள்ளார் என்று தருமலிங்கத்திடம் கூறி அவரைக்காரில் ஏற்றினோம். அவர்களை அழைத்துச் சென்று 8 அல்லது 8.30 மணியளவில் கோண்டாவிலை அடைந்தோம். தருமலிங்கத்தை சிட்டிபாபுவுடன் அங்கு இறக்கி விட்டு ஆலாலசுந்தரத்தை நல்லூர் ராஜவீதி சந்திக்கு கொண்டு சென்றோம். சனநடமாட்டமற்ற ஒதுக்குப்புறத்தில் ஆலாலசுந்தரத்தின் கைகளைக்கட்டி நானும் வசந்தனும் சுட்டுக் கொன்றோம். பின்னர் திரும்பி வந்து தருமலிங்கத்தை ஏற்றிக்கொண்டு தாவடி றோட்டில் தோட்ட வெளிக்கு அழைத்துச் சென்றோம். அவரையும் சிட்டிபாபு சுட்டுக் கொன்றார். பின்னர் இவர்களது உடல்களை அவர்களது பாராளுமன்ற தொகுதிகளுக்குக் கொண்டுபோய்ப்போட்டோம். பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் துரைரத்தினம் தூரஇருந்ததால் அன்று இரவு அவரைக்கொல்ல முடியாமல் போய் விட்டது. நீலன் திருச்செல்வத்தைக் கொல்லவும் ஆயத்தங்கள் நடந்ததாக நான் அறிந்தேன். இக் கொலைகளுக்கு 1SMG, இரண்டு AK 47, ஆகிய இயந்திரத்துப்பாக்கிகளை பயன்படுத்தினோம்.

இக் கொலைகளுக்கான பொறுப்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் மேல் சுமத்தப்பட்டது. அன்று நாம் அக்குற்றச்சாட்டை மறுத்தோம். இன்று ஆதாரபூர்வமாக உண்மையை வெளிக்கொண்டு வருகிறோம். கொலை செய்யப்பட்ட தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினருக்காக ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டங்களில் TELO இயக்கத்தவர்களும் பங்கு பற்றித் தமது எதிர்ப்பை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. ENLF உடன் கூட்டாக இயங்கியபோதே TELO இயக்கம் இப்படுகொலையைப்புரிந்து விட்டு எம்மீது பழியைப் போட்டது.

எல். சுப்பிரமணியம்

அரசியல் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

(இப் பிரசுரம் இலண்டன் கிளையினரால் மறுவிநியோகம் செய்யப்படுகிறது.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்